அன்பார்ந்த..................................................................................................

இவ்வாண்டு நீங்கள் உங்களது 35 வது வயதை அண்மிக்கின்றீர்கள். உங்கள் சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவின், சுகாதாரப் பராமரிப்பு உத்தியோகத்தர்கள் என்ற முறையில், இதனை ஒரு முக்கியமான மைல்கல் எனக்கருதி, ஒரு முக்கிய சுகாதார சம்பந்தமான செய்தியை உங்களுக்குத் தர விரும்புகின்றோம்.

வயது அதிகரிக்கும் போது, பல்வேறு தொற்றா நோய்களால் பாதிக்கப்படும் அபாயமும் அதிகரிக்கிறது. உங்கள் நல்வாழ்க்கையைப் பல வழிகளிலும் பாதிக்கும் பாரதூரமான நோய்களில், புற்று நோயும் ஒன்றாகும்.
இலங்கையில் வாழும் பெண்களில், அதி கூடிய எண்ணிக்கையானவர்களின் மரணத்திற்கு, மார்பகப்புற்றுநோயும், கருப்பைவாய்ப் புற்றுநோயுமே காரணம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

கருப்பைவாயிற் புற்று நோயினை, அது புற்றுநோயாக உருவாகு முன்பே உள்ள நிலையிலும், மார்பகப் புற்று நோயை அதன் ஆரம்ப காலங்களிலும், “சுகவனிதையர் பிணியாய்வு” நிலையங்களில், இலவசமாகக் கட்டணம் எதுவுமின்றிச் செய்யப்படுகின்ற சில எளிமையான பரிசோதனைகளின் மூலம், கண்டுபிடிக்கலாம். ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தல், இந்த நோய்கள் வராமல் தடுப்பதற்கும், இந்நோய்களைக் குணப்படுத்தவோ, அன்றி அவற்றால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கோ வழிகோலும்.

அத்துடன், இந்தச் சுகவனிதையர் பிணியாய்வு நிலையங்களில், **உயர் குருதி அழுத்தத்திற்கும், நீரிழிவு நோய்க்கும் உங்களைப் பரிசோதித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமும், உங்களுக்கு மேலதிக அனுகூலமாகக் கிடைக்கும்.**

இதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் இந்த பெறுமதிமிக்க சேவைகளை, உங்களுக்கு எதுவிதக் கட்டணமும் இன்றி, உங்களுக்கு மிக அண்மையில் உள்ள “சுகவனிதையர் பிணியாய்வு” நிலையங்களில் வழங்குவதவதற்கான, பாரிய செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

**உங்களை, இந்த ‘சுகவனிதையர் பிணியாய்வு’ நிலையத்தில் .............................................. திகதி ................................ மாதம் 2011 அன்று, ......................................... மணிக்குச் சென்று, இந்த அரிய சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு நாங்கள் அழைக்கின்றோம்.** இந்த விடயம் பற்றி உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் கலந்தாலோசிப்பது முக்கியம் என நாம் கருதுவதால், அதனை நாம் ஊக்குவிக்கின்றோம்.

தரப்பட்ட திகதியில், மேற்படி சுகவனிதையர் பிணியாய்வு நிலையத்தில் உங்களுடனான சந்திப்பை நாம் எதிர்பார்க்கின்றோம்.

.....................................................................................

(சுகாதார வைத்திய அதிகாரியும், சுகாதாரப் பராமரிப்புக் குழுவும்)